| **இலக்கம்** | **சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள்/ தீர்மானங்கள்** | **பொறுப்பு/ பொறுப்பு வகிக்கும் நிறுவனம்** | **நிறைவேற்ற வேண்டிய திகதி** |
|---|---|---|---|
| 01 | **<u>வீட்டுத் தோட்டங்களை இனங்காணுதல்</u>**<br>காணி அமைச்சின், காணிப்பயன்பாட்டுத் திணைக்களத்தினால் உள்ளூர் வீட்டுத் தோட்டங்களின் பொருட்டு வழங்கப்படுகின்ற வீட்டுத் தோட்டக்காணிப் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு வீட்டுத் தோட்டங்களை இனங்காணுதல் | செயலாளர்- காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு.<br><br>செயலாளர்- மகாவலி, விவசாய, நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு.<br><br>செயலாளர்- பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி விவசாய அமைச்சு.<br><br>செயலாளர்- மகளிர், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு.<br><br>சகல மாவட்ட செயலாளர்கள், மற்றும் பிரதேச செயலாளர்கள்.<br><br>பணிப்பாளர் நாயகம்- விவசாய திணைக்களம்.<br><br>ஆணையாளர் நாயகம்- கமநல அபிவிருத்தி திணைக்களம்.<br><br>பணிப்பாளர் நாயகம்- சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்.<br><br>பணிப்பாளர் நாயகம்- காணிப் பயன்பாட்டுத்திட்டமிடல் திணைக்களம். | ஜூலை 31 இற்கு முன்னர் |
| | ❖ ஒவ்வொரு வீட்டுத்தோட்டத்தினதும் ஒருங்கிணைப்பின் பொருட்டு கிராம மட்டத்திலுள்ள உத்தியோகத்தர்களான, கிராம உத்தியோகத்தர், விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், குடும்ப சுகாதார உத்தியோகத்தரும் உட்பட்ட கிராமியக் குழுவின் மூலம் மேற்கொள்ளல் அத்தடன் ஒவ்வொரு உத்தியோகத்தரும் தனது பிரிவின் சரியான வீட்டுத் தோட்டங்களின் எண்ணிக்கையினை ஒருங்கிணைத்தல் | | |
| | ❖ வீட்டுத்தோட்டத்தின் பொருட்டு கனிணி App ஒன்று தயாரிக்கப்படுவதுடன் அதில் வீட்டுத்தோட்டத்தினை பதிவு செய்து வீட்டுத் தோட்டங்களுக்குறியதாக கீழுள்ள விபரங்களை உட்படுத்ததல் வேண்டும். | | ஜூலை 31 இற்கு முன்னர் |
| | **<u>விவசாய ரீதியான காலநிலை வலயங்களுக்குப் பொருத்தமானதாக</u>**<br>❖ வீட்டுத்தோட்டத்திற்குத் தேவையான விதைகளையும் நாற்று வகைகளையும் வழங்குதல். | செயலாளர்- மகாவலி,விவசாய, நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு. | ஆகஸ்ட் 31இற்கு முன்னர் |

| | | | |
|---|---|---|---|
| | இங்கு குறிப்பிட்ட தரத்தினையுடையதாக பிரதேசத்திற்கு பொருத்தமான பயிர்வகைகள் 08லிருந்து 05ஐக் கலவை செய்து தயாரிக்கப்பட்ட விதைப் பக்கட்டுக்களுடன் ஆலோசனைப் படிவம் ஒன்றினையும் வழங்குதல்.<br><br>இதற்கு மேலதிகமாக தெரிவு செய்யப்பட்ட மரக்கறி வகைகளை நாற்றுக்களாக வீட்டுத்தோட்டங்களின் பொருட்டு வழங்குதல். இதன் பொருட்டு கிராமிய மட்டத்தில் கமநல அபிவிருத்தி மற்றும் சமுர்த்தி நாற்று மேடைகளை பயன்படுத்திக் கொள்ளல், இங்கு மரக்கறி நாற்றுக்களின் பாதுகாப்பின் பொருட்டு தும்புச்சோறு இடை உற்பத்திகளிலிருந்து உள்நாட்டில் உற்பத்திகளிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற சிறிய வகையான நடுகை பன்னும்சாடிகள் (Coco peet) மற்றும் நடுகை செய்யப்படும் தட்டுக்களை பயன்படுத்ததல். தேவையான சிறிய தும்பச் சோற்றுச் சாடிகள், மற்றும் அவை நிறுத்தி வைக்கப்படுகின்ற நிறுத்திகள், நாற்றுமேடை சொந்தக்காரர்களுக்கு வழங்கும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் ஏற்றுமதிப் பயிர்ச்செய்கை அமைச்சு, தெங்கு அபிவிருத்தி சபை, மற்றும் விவசாயத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளல். இவ்வாறு நாற்றுக்களை உருவாக்குவது மற்றும் நாற்று மேடை நடவடிக்கைகள் தொடர்பில் நாற்று மேடை உரிமையாளர்களை விளக்கமளித்தல். | செயலாளர்- பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி விவசாய அமைச்சு. | |
| | ➢ கிராமிய மட்டத்திலுள்ள நாற்ற மேடைகளிலிருந்து மரக்கறி நாற்றுக்களை பெற்றுக்கொண்டு அந்தந்த பிரதேசங்களுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதனால் கன்றுகளுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களை குறைந்துக்கொள்ள முடியும்.<br>➢ மரத்தண்டு மற்றும் மரக்கிளைகள் ஊடாக நடுகை செய்யப்படுகின்ற கன்றுவகைகளையும் வளர்த்தல். | பணிப்பாளர் நாயகம்- விவசாய திணைக்களம்.<br>ஆணையாளர் நாயகம்- கமநல அபிவிருத்தி திணைக்களம்.<br>பணிப்பாளர் நாயகம்- சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்.<br>தலைவர்- தென்னைப் பயிர்ச் செய்கை சபை.<br>ஆணையாளர் நாயகம்- ஆயுர்வேத திணைக்களம்.<br>தலைவர்- நீர் உயிரியல் வாழ் வளர்ப்பு அதிகார சபை. | ஆகஸ்ட் 31இற்கு முன்னர் |

| இலக்கம் | சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள்/ தீர்மானங்கள் | பொறுப்பு/ பொறுப்பு வகிக்கும் நிறவனம் | நிறைவேற்ற வேண்டிய திகதி |
|---|---|---|---|
| | **<u>வீட்டுத் தோட்டத்தின் பொருட்டான பயிர் வகைகளும் கால்நடை வளர்ப்பும்</u>**<br>I. கீரை வகைகள்- பல்லாண்டு அகத்தி போன்ற கீரை வகைகள், பாத்தி முறையில் நடுகை செய்யப்படும் பசளி, வள்ளாரை, சாரணை போன்ற கீரை வகைகள்<br>II. கொடிப்பயிர்கள்- வெற்றிலை, வெணிலா, காசிக் கொள்ளு<br>III. கிழங்கு வகைகள்- வற்றாலை, மரவள்ளி, சேமக் கிழங்கு, மஞ்சல், இஞ்சி, மற்றும் தேசிய கிழங்கு வகைகள்.<br>IV. பல்லாண்டுப் பயிர்கள்- தென்னங்கன்று, பழவகைகள், (குறைந்த காலத்தில் பயன்தரக்கூடிய ஒட்டுப்பழத்தாவரங்கள்)<br>V. ஏற்றுமதிப் பயிர்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள்- (மிளகு, குருவா, ஏலம், ரம்பை, கறிவேப்பிலை, சேரை பொன்ற பயிர்கள்)<br>VI. வீட்டுத்தோட்ட எல்லைகளில் நடக்கூடிய பெறுமதி வாய்ந்த பலகைகளுக்கான மரங்களை நடுதல்.<br>VII. பல்லாண்டு மரங்கள்- பலா, ஈரப்பலா, பிலிங்கை, முருங்கை மற்றும் கமுகு<br>VIII. மூலிகைத் தாவர வகைகள்<br>IX. காளாண் பயிர்ச்செய்கை.<br>X. தேனி வளர்ப்பு<br>XI. மனை சார்ந்த கால் நடை வளர்ப்பு – கோழி வளர்ப்பு<br>XII. உணவின் பொருட்டான நன்னீர் மீன் வளர்ப்பு. | | |
| 02 | **<u>சமுதாய அமைப்பிகளை செயற்பாடுள்ளதாக கலந்து கொள்ளச் செய்தல்.</u>**<br>வேலைத்திட்டத்தினை செயற்படுத்தும் போது கிராம மட்டத்தில் செயற்படும் மக்கள் அமைப்புக்களான விவசாய சங்கங்கள், மகளிர் அமைப்புக்கள், இளைஞர் கழகங்கள், கூட்டறவு சங்கங்கள், முதியோர் சங்கங்கள், நலன்புரி மற்றும் மரணாயார சங்கங்கள், ஓய்வூதிய சங்கங்கள் போன்ற அமைப்புக்களை தொடர்பு படுத்திற்கொள்ளல் வேண்டும்.<br>மக்கள் அமைப்புக்களை தொடர்புபடுத்தி கொள்வதனை இலகுவாக்கி கொள்வதற்கு அந்தந்த அமைப்புக்களை ஒருங்கிணைப்புச் செய்யும் நிறுவனங்கள் மற்றும் உச்சமட்டத்திலுள்ள சங்கங்களில் இந்த வேலைத்திட்டத்தினை ஒருங்கிணைப்புச் செய்தல் வேண்டும் | சகல மாவட்ட செயலாளர்கள், மற்றும் பிரதேச செயலாளர்கள்.<br><br>ஆணையாளர் நாயகம்- கமநல அபிவிருத்தி திணைக்களம்.<br><br>கிராமியக் குழுக்கள். | ஜுலை 31 இற்கு முன்னர் |

| இலக்கம் | சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள்/ தீர்மானங்கள் | பொறுப்பு/ பொறுப்பு வகிக்கும் நிறவனம் | நிறைவேற்ற வேண்டிய திகதி |
|---|---|---|---|
| 03 | **<u>வேலைத்திட்டங்களின் கட்டமைப்பு</u>**<br>I. தேசிய மட்டத்திலான குழு<br>II. மாகாணக் குழு<br>III. மாவட்டக்குழு – மாவட்டச் செயலாளர்களின் தலைமையில் நடைபெறும் மாவட்ட விவசாயக் குழு.<br>IV. பிரதேச செயலாளர்களின் தலைமையில் நடைபெறும் பிரதேச விவசாயக் குழு<br>V. கிராமியக் குழு – கிராம உத்தியோகத்தர், வி.ஆஉ.உ.., சமுர்த்தி உத்தியோகத்தர் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், குடும்ப சுகாதார உத்தியோகத்தர், மற்றும் செயற்பாடுள்ள மக்கள் அமைப்பிற்குள்ளான கிராமியக் குழ தேவையான சந்தர்ப்பங்களில் பாடசாலை அதிபர்களையும் இனைத்துக் கொள்வது பொருத்தமானதாகும். | மாவட்டச் செயலாளர்கள்<br><br>பிரதேச செயலாளர்கள்<br><br>கிராமியக் குழு | ஜுலை 20 இற்கு முன்னர் |
| 04 | **<u>விளக்கமளிக்கும் பயிற்சிப் பட்டறை</u>**<br>I. பயிற்சிப்பட்டறை<br>❖ பயிற்றுனர்களை விளக்கமளிக்கும் தேசிய மட்டத்திலானது.<br>❖ பயிற்றனர்களை விளக்கமளிக்கும் மாவட்ட மட்டத்திலானது.<br>❖ பயனாளிகளை விளக்கமளித்தலும் கலத்துறை பயிற்சியும்.<br><br>தேசிய மட்டத்தில் பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களால் மாவட்ட மட்ட உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல். மாவட்ட மட்டத்தில் பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களால் பயனாளிகளை விளக்கமளிப்பதும் கலப்பயிற்சியினை வழங்குவதும்.<br>குறிப்பிட்ட வீட்டுத்தோட்ட எண்ணிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்யும் கிராமிக் குழு உத்தியோகத்தர்களால் தெரிவு செய்யப்பட்ட மாதிரி வீட்டுத் தோட்டம் ஒன்றினை இக்களப் பயிற்சியின் பொருட்டு பயனள்படுத்திக் கொள்ள முடியும். | தொடர்புடைய திணைக்களமும்<br><br>நிறுவனத் தலைவர்களும்<br><br>உரிய நிறுவனங்களின் மாவட்ட தலைவர்கள்<br><br>கிராமிக் குழு<br><br>விவசாய திணைக்களம், கமநல அபிவிருத்தி திணைக்களம் | ஜுலை 20இற்கு முன்னர்<br><br>ஜுலை 31இற்கு முன்னர்<br><br>ஆகஸ்ட் 31க்கு முன்னர். |

| | | | |
|---|---|---|---|
| | II. விவசாய, கமநல அபிவிருத்தி, ஏற்றுமதிப்பயிர்கள், நன்னீர் மற்றம் நீர் உயிர்வாழ் வளர்ப்பு, கால் நடை வள அபிவிருத்தி, ஆயுர்வே மற்றும் இறப்பர் போன்ற வீட்டுத் தோட்ட அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்கின்ற தேசிய மட்டத்திலான நிறுவனங்களால் மாவட்ட மட்டத்தில் உத்தியோகத்தர்களை வரவழைத்து அறிந்து கொள்ளவேண்டிய அடிப்படை விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கும் வேலைத்திட்டங்களை துரிதமாக செயற்படுத்தல். இங்கு பயிற்றுனர்களை பயிற்றுவித்தல் (TOT). இப்பயிற்சில் வீட்டுத் தோட்ட அபிவிருத்தி பங்களிப்புச் செய்யும் பிற நிறுவனங்களையும் வளனர் பங்களிப்பாக தொடர்புபடுத்திக் கொள்ளல் வேண்டும். அதன் பொருட்டு கமநல சேவைகள் திணைக்களத்தின் பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்களது பங்களிப்பினைப் பெற்றக் கொள்ளல் வேண்டும்.<br><br>III. கமநல சேவைகள் நிலையத்தில் நடைபெறும் வீட்டுத் தோட்ட உரிமையாளர்களை விளக்கமளிக்கும் பயிற்சிப் பட்டறைகளில் ஒரு பட்டறையில் கலந்து கொள்ளும் எண்ணிக்கையானது 40 பேருக்கு வரையறைக்கப்படல் வேண்டும். | உரிய நிறவனங்களின் தலைவர்கள்<br><br>கிராமியக் குழு | ஜுலை 20இற்கு முன்னர்<br><br>ஜுலை 31இற்கு முன்னர் |
| 05 | இந்த வேலைத்திட்டம் மற்றும் அதிலுயள்ள முக்கியத்துவம் தொடர்பில் அதனோடு தொடர்பு படுகின்ற சகல நிறவனங்கள், கையேடுகள், இலத்திரணியல் மற்றும் அச்சு ஊடகங்கள் ஊடாக மக்களை விளக்கமளிப்பதற்கு பிரச்சார வேலைத்திட்டங்களை ஆரம்பித்தல். | தொடர்புபட்ட திணைக்களங்களும் நிறவனத் தலைவர்களும். | ஒக்டோபர் 31 இற்கு வரை |